பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆவணி 30 ஷவ்வா 1 இதழ் 215
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-9-77

## தமிழ் அகதிகளுக்கு ஒன்றேகால் லட்சம் டாலர் நிதிஉதவி!

### உலக நிவாரணசபை வழங்குகிறது

வண்ணார்பண்ணை, புதன்

அகிலஉலக நிவாரணச் சபை, இலங்கைத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு ஒன்றே கால் லட்சம் அமெரிக்க டாலர்களை வழங்க முன்வந்துள்ளது. தமிழ் அகதிகள் புனரமைப்புக் கழகம் இதைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் அகதிகள் புனரமைப்புக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தகவலை வண. பிஷப் அம்பலவாணர் தெரிவித்தார்.

உலக நாடுகளில் உள்ள வேறு தர்ம ஸ்தாபனங்கள் மருந்து வகைகள் போன்ற சுகாதாரப் பொருட்களைக் கொடுத்து உதவிசெய்யச் சம்மதம் தெரிவித்துள்ளதென்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய மேல்மாடியில் மேற்படி அகதிகள் புனரமைப்புக் கூட்டம் திரு. ஏ. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தொழில் செய்து, தமது பொருட்கள், உடைமைகள், தனம் சகலதையும் இழந்த நிலையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமக்கெனச் சொந்த வசிப்பிடமோ தங்கும் வசதியோ இல்லாமல் அகதிகளாக வந்துள்ள தமிழ்மக்களின் புனர்வாழ்வுக்காக இக்கழகம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இயன்றளவில் அரசாங்க உதவிகள் தேவையென்றும் திரும்பித் தாம வாழ்ந்த இடங்களுக்குச் செல்ல முடியாதவர்களும்

(6-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி கொள்ளைச் சம்பவங்கள்:

# விசேட பொலிஸ் குழு நியமனம்

# விசாரணை கொழும்பில்தான்!

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

### யாழ்ப்பாணத்தில் பலப்படுத்தப்படும்

(கொழும்பு)

**யாழ். மாவட்டத்தில் சமீபத்தில் நடைபெற்ற அச்சுவேலி ப.நோ.கூ. சங்கக் கொள்ளை முதலான சம்பவங்கள் முழுமையாக கொழும்பிலேயே விசாரணை செய்யப்படும்.**

இதன் பொருட்டு பொலிஸ் மாஅதிபர்திரு.ஸ்டான்லி சேனநாயக்கா, பொலிஸ் அதிபர் திரு. சில்வா தலைமையிலான விசேட பொலிஸ்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவில் இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரையில் இடம்பெற்றுள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இக்குழு விசாரணையின் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கும் வந்து செல்லும்.

**யாழ்ப்பாணத்தில் கூட்டு ரோந்து**

இதேவேளையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. தர்மபால, வடபகுதியில் இராணுவ, கடற்படை, பொலிஸ் முக்கூட்டு ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடபகுதி இணைப்பதிகாரி திரு. ருத்ரா ராஜசிங்கத்தைப் பணித்துள்ளார்.

**குற்றச்செயல்கள் அதிகரிப்பு இங்கு**

நாட்டில் தற்போது யாழ். மாவட்டத்தில் மட்டுமே கூடிய குற்றச்செயல்கள் நடைபெற்று வருவதாக அறிக்கைகள் தெரிவிப்பதால் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறு திரு. தர்மபால, திரு. ராஜசிங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

**மாநாடு கூட்டினர் ருத்ரா**

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் இப்பணிப்பையடுத்து திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்று யாழ்ப்பாணத்தின் முப்படை அதிகாரிகளையும் கொண்ட மாநாடு ஒன்றினை நடத்தினர்.

பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகள் குறித்து அவர் அவ்வேளை விளக்கிக் கூறினர்.

**படை தீவிரம்**

மேலும், இணைப்பதிகாரி திரு. ருத்திரா ராஜசிங்கம்

(6-ம் பக்கம் பார்க்க)

முகமூடி கொள்ளையன் கொலை:

## சிறுவன் ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி

கொடிகாமம், புதன்

அல்லாரையில் முகமூடி கொள்ளையன் வெட்டிக்கொலை செய்யப்பட்டது தொடர்பாக சரணடைந்த சந்தேகநபரான 13-வயதுச் சிறுவன் சி. நாகராசா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் மரண விசாரணை நடத்தினார்.

சாவகச்சேரி பொலிஸார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். கொலையுண்ட முகமூடிக் கொள்ளைகாரர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

கொள்ளையர்கையில் சிக்கித் தவித்த தந்தையின் பரிதாப நிலை கண்டு பாசத்தினால் உந்தப்பட்டு இத்துணிகர செயலைச் செய்த இச் சிறுவன் சாவகச்சேரி இந்துக்கல்லூரிமாணவன் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. (க)

## டாக்டர்கள் இன்று மீண்டும் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், வியா.

அண்மையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு நிலைபெயர்க்கப்பட்ட அரசாங்க வைத்திய அதிகாரிகள் மீண்டும் இன்றுகாலை 10 மணிக்கு யாழ் அரசாங்கஆஸ்பத்திரியில் கூடி தமது

(6-ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர் பிரதமரை சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம், வியா

பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா யாழ்ப்பாணம் விஜயம்செய்யும்போது வளாக மாணவரின் கோரிக்கைகள், பிரச்னைகள் பற்றிப் பேசுவதற்கு ஏற்பாடுசெய்துதருமாறு மாவட்ட இணைப்பு அதிகாரியைக் கோருவதென பாதிக்கப்பட்ட தமிழ் விரிவுரையாளர்கள், வளாக மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் விரிவுரையாளர்கள், வளாக மாணவர்கள் அமைப்பின் கோரிக்கைகளைக் கலந்தாலோசிப்பதற்கு, பிரதமர், கல்வி மந்திரி, உபவேந்தர், வளாகத் தலைவர்கள் ஆகியோருடன் அமைப்புக்குழுப் பிரதிநிதிகள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சகல வளாக மாணவ சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்றைச் சந்திக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழ் விரிவுரையாளர், வளாக மாணவர் அமைப்பு கீழ்க்காணும்கோரிக்கைகளை விடுத்துள்ளது.

வளாகம் திறக்கும் திகதியை நிர்ணயிப்பதில் அமைப்பின் விருப்பமும் பெறப்படல் வேண்டும்

வளாகத்தில் எதிர்காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளிற்கு ஒழுங்குசெய்தல்!

வளாகத்தினுள் பாதிக்கப்பட்ட மாணவருக்கும், விரிவுரையாளருக்கும் இடவசதி செய்துகொடுத்தல் வேண்டும்.

மாணவர்களிக்குத் தேவையான வசதிகளை, குறிப்பாக வங்கிக்கடன், தபாற்கந்தோர் வசதி உட்பட வளாகத்தினுள் அமைத்துக்கொடுத்தல் வேண்டும்.

சிறந்த ஒரு பாதுகாப்பு அமைப்பை வளாகத்தினுள் அமைத்தல் வேண்டும்.

வளாகங்கள் திறக்கப்படும் மூடப்படும் நாட்களில் மாணவர்கள் பயணம்செய்யும் புகையிரதங்களுக்கு பாதுகாப்பு வழங்க ஒழுங்குசெய்தல்வேண்டும்.

உடனடியாக நடைபெறவுள்ள பரீட்சைகளை பாதிக்கப்பட்ட மாணவர்க்கு வசதியான இடத்தில்நடாத்தவசதி செய்துகொடுத்தல் வேண்டும்.

கோரிக்கைகளைபற்றி மேலும் விபரங்களை அறிய விரும்பும் வளாக மாணவர்கள் தங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

சைவ ஹோட்டல் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிங்கள ஆண்டு ஆவணித் திங்கள் 30-ம் நாள் (15-9-77) இன்று வியாழக்கிழமை காலை 8-30 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

★ அசோக்பவன் ★

என்னும் சைவ ஹோட்டலை
112, ஆஸ்பத்திரி வீதியில்
யாழ். தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்
உயர்திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள்
ஆரம்பித்துவைப்பார்கள்.

அவ்வமயம் தாங்களும் சமுகந்தந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தி. சாமிநாதன்
(முன்னைநாள் மலாயன் கபே நிர்வாகஸ்தர்)

எஸ். எம். முகம்மது மொகைதீன்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆனந்தவிகடன், தீபம் சஞ்சிகைகள் இனிமேல் மேற்படி விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

7105

ப. நோ. கூ. சங்க

## ஊழல்கள் பற்றி விசாரணை நடக்கிறது

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், ஆரம்பகாலத்திலிருந்து கடந்த தேர்தல்வரை நடைபெற்ற ஊழல் நிர்வாகச் சீர்கேடு, மோசடி, சட்டத்திற்கு மாறான நியமனங்கள் பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கென ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். நாகலிங்கம், விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்துள்ளார்.

கூட்டுறவுச் சட்டத்தில் 46/1 பிரிவின் கீழ் இந்த விசாரணை நடைபெற்று வருகிறது.

கூட்டுறவுச்சங்க ஆரம்பகாலம் முதல் 21-7-77 வரை நடைபெற்ற ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள்பற்றி விசாரணை செய்யப்படும்.

விசாரணை உத்தியோகத்தர் முன் கடந்தகாலத்தில் நடைபெற்ற ஊழல்கள் பற்றிச் சாட்சியமளிக்க விரும்புகிறவர்கள் எழுத்துமூலம், அவருக்கு நேரடியாக விண்ணப்பித்து, அதற்கான நேரத்தை ஒழுங்கு செய்து கொள்ளலாம் என உதவிக் கூட்டுறவு ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நடந்த ஊழல்கள், நிர்வாகச் சீர்கேடுகள் பற்றிய தகவல்களை எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் விசாரணை உத்தியோகத்தருக்குத் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறினார். (க அ)

## தமிழக வரலாறு மீளவும் எழுதப்படும்

சென்னை, செப் 14

தமிழகத்தின் வரலாற்றை மீளவும் எழுதுவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் மு வரதராசன் ''தொல்பழம் தமிழகம்'' என்னும் தலைப்பில் தமிழக வரலாறு பற்றி முன்பே ஒரு வரலாற்று நூலை வெளியிட்டுள்ளார். இதையடுத்து பண்டைத் தமிழக வரலாற்றை வெளிக்கொண்டுவரும் எண்ணத்துடன் தமிழக வரலாற்றை எழுதும் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (கி)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


### ஏல விற்பனை

பாற்பண்ணைத்திட்டம் — நல்லூர்

மேற்படி பாற்பண்ணையில் 3 மந்தைகளும், பழைய தளபாடங்களும், பாற்பாத்திரங்களும் 17-09-1977 அன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கக் காரியாலய வளவில் பகிரங்க ஏல விற்பனையில் விடப்படும்.

பொதுமுகாமையாளர்

நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

நல்லூர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
62, வைமன் றோட், யாழ்ப்பாணம். 7101



தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்

(வரையுள்ளது)

### தெல்லிப்பழை

### பதவி வெற்றிடம்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தராதரம், வயது, அனுபவம், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதியோடு 30-9-77 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, ''பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்திலேயே அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் ரூ. 1/ செலுத்திப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். தபால் மூலம் பெறவிரும்புவோர் முத்திரையிடப்பட்ட, சொந்த முகவரியிட்ட கடித உறையும், ரூ. 1/- பெறுமதியான முத்திரையும் அனுப்புதல் வேண்டும். சங்கத்தில் நிரந்தர சேவையிலுள்ள பணியாளர்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட வயதெல்லை பொருந்தாது. விண்ணப்பதாரி யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். இச்சங்கத்தின் தொழிற்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நுகர்ச்சி முகாமையாளர் தரம் II
பதவி 1, நிரந்தரம்

கல்வித்தராதரம்: 1. ஒரு வருட கால அனுபவமும், கூட்டுறவுப் பயிற்சியும் பெற்ற பட்டதாரி. அல்லது,
2. ஒரு வருடகால அனுபவத்துடன் பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பெற்ற நிலையமொன்றில் வழங்கப்பட்ட டிப்ளோமா தராதரப்பத்திரம். அல்லது
3. கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப்பத்திரமும், இரண்டு வருட கால அனுபவமும்.

வயது: விண்ணப்ப முடிவு திகதியன்று 23 முதல் 40 வரை.

சம்பளம்: 400—650
15X10, 20X5

பொதுமுகாமையாளர்

தெல்லிப்பழை.
13-9-77. 7092


## 'அடித்தள மக்கள் வாழ்வின் தரம் உயர்த்திய அண்ணு'

யாழ்ப்பாணம், வியா.

''சமூகத்தின் அடித்தள மக்களை உயர்த்துவதற்கு பேரறிஞர் அண்ணு ஆற்றிய தொண்டு அளப்பரியது'' என்று அறிஞர் அண்ணு நினைவுதினத்தையொட்டி கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத்தின் முன்னள் தலைவர் திரு.ம.சு சாம்பசிவம் விடுத்துள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

''அண்ணு அவர்கள் கலை, இலக்கியம், வரலாறு, அரசியல் நாகரீகம் அனைத்திலும் பேரறிஞராய் விளங்கினர். அரசியல் வாழ்வை தூய்மைப்படுத்தி அரசியலில் சிறந்த நாகரீகத்தையும், பண்பாட்டையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினர். அதன் விளைவே இன்று உலகத் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல வேற்று மொழிபேசும் இனத்தவர்கள் மத்தியிலும் நன்மதிப்பைப்பெற்றுர்.''

ஒவ்வொரு சங்கத்திற்கும்

## நெறியாளரைச் சிபார்சு செய்ய எம். பிக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுவிற்கு 8 பேரை சிபார்சு செய்து அனுப்புமாறு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல எம். பிக்களுக்கும் நேற்றுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இத்தகவலை கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். நாகலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கௌரவ மேற்பார்வையாளராக இருவரைச் சிபார்சு செய்து அனுப்புமாறு எம்.பிக்களிடம் கோரியிருப்பதாகவும் அவர் கூறினர்

இந்த மேற்பார்வையாளர்களுக்கு எவ்வித அலவன்சும் வழங்கப்படாதென்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு ஆணையாளர் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படுவாரென்றும், பொதுச் சபையால் தெரிவான ஐவரும் தொடர்ந்து குழுவில் இருப்பார்களென்றும் அவர் கூறினர்.

டிசம்பர் மாதம் பொதுச் சபையால் 5 புதிய நெறியாளர்களைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினர். (க-அ)

## 19ம் திகதிக்கு முன் வேலைக்குத்திரும்பவேண்டும்

கொழும்பு, புதன்

வேலைக்குச் செல்லாதிருக்கும் அரச-கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் இம்மாதம் 19ம் திகதிக்குமுன் வேலைக்குத் திரும்பிவிடவேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த இருவாரங்களாக நாட்டில் பாதுகாப்பு நிலைமை சீராக இருக்கிறது.

கலவரங்களால் தம் இடங்களைவிட்டு வெளியேறி இதுவரை அலுவலகங்களுக்குத் திரும்பாதிருக்கும் ஊழியர்கள் எதிர்வரும் 19-ம் திகதி திங்கட்கிழமைக்குமுன் வேலைக்குத் திரும்பவேண்டும்.

இதுவரை அலுவலகத்துக்கு வராத ஊழியர்களுக்கு இம்மாதம் 12-ம்திகதிவரைவிசேட லீவுடனை முழுச்சம்பளமும் வழங்கப்படும்.

12-ம் திகதிக்கும் 19-ம் திகதிக்கும் இடையில் முறைப்படி லீவு எடுத்துக்கொள்ளலாம்.

19-ம்திகதிக்குப்பின் முறைப்படி லீவு எடுக்காமல் அலுவலகத்துக்குவராத ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படமாட்டாது. (உ)

## 19-ம் திகதி ஆராய்வர்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண வளாக மாணவர்கள் அனைவரும் தங்கள் பிரச்னைகள் பற்றி ஆராய இம்மாதம் 19-ம் தேதி காலை 9 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள இராமநாதன் மண்டபத்தில் கூடவிருக்கிறார்கள். (க)

## அரசியல் பழிவாங்கல்: விசாரணை ஆரம்பம்

கொழும்பு, புதன்

அரசியல் காரணங்களுக்காகப் பழி வாங்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் பிரச்னைகள் தொடர்பான விசாரணைகளை பொது நிர்வாக உள்நாட்டு பிரதி அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீரா நேற்று ஆரம்பித்தார்.

பழி வாங்கப்பட்ட ஊழியர்களின் விவகாரம் தொடர்பான விசாரணை செய்யும் பொறுப்பு திரு. சமரவீராவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ)

ஆசிரியர்கள்

## இடமாற்றங்கள் ரத்து!

கொழும்பு, புதன்

எல்லா ஆசிரிய இடமாற்றங்களும் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன.

கல்விஅமைச்சர் திரு நிஸங்க விஜயரத்னவின் உத்தரவின் பேரிலேயே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் முடிவின்படி, கடந்த செப்டம்பர் மாதம் 1-ம் திகதிஅமுல் செய்யப்பட்ட இடமாற்ற உத்தரவுகள் கூட நிறுத்தப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடக்கும்

வண்ணார்பண்ணை, புதன்

நூலக இடைநிலைப் பரீட்சையை இம்முறை யாழ்ப்பாணத்திலும் நடத்த இலங்கை நூலகச் சங்கம் தீர்மானித்துள்ளது.

முதலாவது பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், நூன சித்திபெற்றவர்கள் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பெற வேண்டும் என்று சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## ராஜினமா

கொழும்பு, புதன்

கப்பல், உல்லாசத்துறை அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட திரு.வோல்டர் ரூபசிங்க தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பரந்தன்- முரசுமோட்டை 2-ம் கட்டையில் வாய்க்கால் வசதியுள்ள 5 ஏக்கர் வயல் நிலம், ஊர்காவற்றுறை பட்டினசபை எல்லையுள் 4 பரப்புக் காணியும் வீடும், 2 பரப்புத் துண்டும், கிராம சபை எல்லையுள் வீடுவளவின் அரைப்பங்கும், புறம்பாக 4 பரப்புத்துண்டும். தொடர்பு கொள்க: க. சிவனடியான், 17/2, ஐயனர் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 7095

ஒரிஜினல் திண்டுக்கல் பெரிய இரும்புப்பெட்டி அடைவு கடைக்கு ஏற்றது. நேரில் பார்வையிடவும். 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7081

''தமிழ்த்தாயின் கண்ணீர் 1977'' ஆவணி சம்பவங்கள் விலை ரூ. 2-00. எங்கும் கிடைக்கும். 7094

உருத்திர வீணையும், தம்புராவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 95, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7087

### வகுப்புகள்

6-H.N.C.E. வரையுள்ள வழமையான வகுப்புகள் 15-9-77 இலும், புதிதாக O/L. A/L விஞ்ஞான மீட்டல் வகுப்பு, Spoken English வகுப்பு 19-9 77 இலும் ஆரம்பமாகவுள்ளன. தொடர்பு கொள்க: நிர்வாகி, சிவாகல்வி நிலையம், 71. அரசடிவீதி, நீராவியடி. 7096

### தேவை

M. B. B. S டாக்டர் வடமாகாணத்தில் வேலை தேடுகிறார்: விபரங்களுக்கு: விளம்பர இல. 7090, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 7090

### WANTED

Mechanical Engineering Diploma holder with 14 years experience in vehicle and heavy machinery repairs. Proficient in coaching Mechanical, Trade Apprentices (Tamil / English / Sinhala), seeks employment as full-time or part-time instructor or suitable job. Advt. No. 7091, C/o Eelanadu, Jaffna. 7091

### காணவில்லை

மல்லாகம்-இணுவிலுக்கு மிடையில் 769 இல பஸ்ஸில் கூடையுடன் இரண்டு கூப்பன்களும், கூப்பன் அட்டையும், இரண்டு சாரி, ஒரு திறப்புக் கோர்வையும் தவறவிடப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகவல் தருபவர்களுக்கு சன்மானம் தரப்படும். க.பரமேஸ்வரன், இணுவில் மேற்கு, இணுவில். 7088

### அறிவித்தல்

மாவிட்டபுரத்தில் எமது சங்கத்தினல் ஆரம்பிக்க இருக்கும் பாண்சாலைக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரத்தை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று 77.09 22ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
தெல்லிப்பழை.

7093

# "இந்திராவைக் கைது செய்வதற்கு போதிய சாட்சியங்கள் உண்டு"



## உள்துறை அமைச்சர் சரண்சிங் அறிவிப்பு

புதுடில்லி, செப். 14

மாஜி பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கைதுசெய்வதற்கு போதிய சாட்சியங்கள் உண்டு என்று பாரத உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அறிவித்துள்ளார்.

ஆயினும் திருமதி இந்திரா காந்தி மீதான குற்றச்சாட்டுக்கள் எவை என்பதை திரு. சரண்சிங் குறிப்பிடவில்லை.

இது இவ்வாறு இருக்க திருமதி காந்தி வெளிநாடுகளில் சொற்பொழிவு நடத்தச் செல்வதற்கு 'பாஸ்போட்' கேட்டு மனுச்செய்து இருப்பது தெரிந்ததே.

### சரண்சிங் எதிர்ப்பு?

நெருக்கடிநிலை அத்துமீறல்கள்பற்றி விசாரணை நடத்தி வருவதால் திருமதி காந்தி வெளிநாடு செல்ல அனுமதிக்கக்கூடாது என்று அமைச்சர் திரு. சரண்சிங் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'எந்தநேரத்திலும் நான் கைதுசெய்யப்படலாம்'' என்று திருமதி காந்தி கூறியுள்ளார்.

### லஞ்சம்பெற்றுராம்

அமெரிக்கா மற்றும் சில நாடுகளில் உள்ள கம்பனிகளிடம் திருமதி காந்தியின் புதல்வர்கள் சஞ்சேய், ராஜீவ் மற்றும் திருமதி காந்தியின் கையாட்கள் லஞ்சம் வாங்கியதாகப் புகார் கிளம்பியுள்ளது.

இதுபற்றி அமெரிக்காவிடம் திரு. சரண்சிங் தகவல் கேட்டிருப்பதாகவும் அது 15ம் திகதிக்குள் கிடைக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (உ)

## சட்டசபைக்கு வராமலே சம்பளம்பெற்றவர் எம்ஜிஆர்

### கலைஞர் கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, செப். 14

"சட்டசபைக்கு தாம் எம். எல். ஏ. ஆக இருக்கும்போது வராமல் இருந்து எம். எல். ஏ. க்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டவர் திரு. எம். ஜி. ஆர்." என்று தி மு க. தலைவர் கலைஞர் கருணாநிதி கூறினார்.

கோதண்டம் என்ற முன்னாள் எம் எல். ஏ. ஒருவர் சென்னையில் இருந்துகொளத்தாருக்கு பிரயாணம் செய்யவென 68 ரூபா 50 சதத்தைப் படியாகப் பெற்றுவிட்டு பிரயாணம் செய்யாது விட்டார் என்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் 71-ம்ஆண்டு தி. மு. க.வில்இருந்துவிலகி அ. இ. தி. மு. க. வில் சேர்ந்தார் என்றும் இப்போது மாஜி தி. மு. க. எம். எல். ஏ. கைது என்று அ. இ. அ. தி. மு க. ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன என்று கலைஞர் குற்றம்சாட்டினார்.

"இது நியாயமா?" என்று கேட்டு, கலைஞர் மேலும் கூறியுள்ளதாவது:-

"சட்டசபை செத்துவிட்டது" என்று கூறி சட்டசபைக்குள் வராது ஆஜர் புத்தகத்தில் மட்டும் கையெழுத்திட்டு விட்டு எம். எல். ஏக்குரிய சம்பளத்தை திரு. எம். ஜி. ஆர். பெற்றது ஒரு கிரிமினல் குற்றம் என்று முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார். இப்படிக் குற்றமிழைத்தவர்கள் இருக்கக் கோதண்டம் மட்டும் தண்டிக்கப்படுவது நியாயமா?" இவ்வாறு கலைஞர் கூறியுள்ளார். (கி-உ)

## லண்டனில் எம். எஸ்ஸுக்கு வாத்ஸல்ய வரவேற்பு



லண்டன், செப். 14

தமது மதுரக்குரலால் ஐ.நா. சபையில் இசைநிகழ்ச்சி நடத்தி 1961-ம் ஆண்டில் சர்வதேச அரங்கில் இணையில்லாப் பெருமை பெற்ற தமிழகத்தை சேர்ந்த இசையரசி திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு நேற்றுமுன்தினம் இரவு லண்டன் மாநரில் பெரும் கௌரவம் கிடைத்தது.

நியூயோர்க் முதலான முக்கிய பல நகரங்களில் இசைக் கச்சேரி நடத்துவதற்குத் தமது குழுவுடன் சென்றுள்ளதிருமதி எம். எஸ்ஸுக்கும் அவரது கணவர் திரு. சதாசிவத்துக்கும் லண்டனில் பெரும் வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது.

தமக்கு அளிக்கப்பட்ட இப்பாராட்டுக்கு திரு. சதாசிவம் நன்றிதெரிவித்துப் பேசினார். பாரதீயவித்தியாபவனும் மற்றும் இயக்கங்களும் இவ்வரவேற்புபசாரத்தை ஏற்பாடு செய்திருந்தன. வரவேற்புபசாரத்தின்பின் திருமதி எம். எஸ். தமது புதல்வியுடன் பஜனைப் பாடல் ஒன்றினைப் பாடினார். (உ)

# கேரள ஆளுநராக

## ஹரிஜனர் நியமனம்

புதுடில்லி, செப்.14

கேரள மாநில ஆளுநராக திருமதி ஜோதி வெங்கடாசலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி வெங்கடாசலம் ஹரிஜனர் சமூகத்தைச் சேர்ந்தவராவார். தமிழ்நாடு மாநில முன்னாள் அமைச்சரும் ஜனதா கட்சி பிரமுகருமான இவருக்கு இந் நியமனத்தை தற்காலிக பாரத ஜனாதிபதி திரு. ஜட்டி வழங்கியுள்ளார்.

காவிரி நீர்:

## பாண்டிச்சேரி முதல்வர் எம். ஜி. ஆருக்கு நன்றி

பாண்டிச்சேரி, செப். 14

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு நீர்ப்பாசன வசதியின் பொருட்டு காவிரிநீர் தந்துதவுவது குறித்து தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு பாண்டிச்சேரி முதல் அமைச்சர் திரு. எஸ். இராமசாமி நன்றிதெரிவித்துள்ளார்.

இந்நீர் உதவி தொடர்ந்தும் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டென்றும் திரு. இராமசாமி கூறியிருக்கிறார். (உ)

### நெருக்கடி நிலையின் போது 3135 வழக்குகள்

புதுடில்லி, செப்.14

இந்தியாவில் அவசரகால சட்டநேரத்தில் பீகாரில் மட்டும் 3135 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன

இவற்றில் 2220 வழக்குகளை ஜனதா அரசுமீளப் பெற்றுள்ளது.

14471 பேர் இவ் வழக்குகளால் பாதிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-உ)

## நீண்ட காலத்தின்பின்

## எம்.ஜி.ஆர். - எஸ்.எஸ்.ஆர். நட்பில் நெருக்கம்

சென்னை, செப். 14

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எம். ஜி. இராமச்சந்திரனுக்கும், இலட்சிய நடிகர் என்று பாராட்டுப் பெற்றவரும் மாஜி தேனீத்தொகுதி சட்டசபை உறுப்பினருமான திரு. எஸ். எஸ். இராஜேந்திரனுக்கும் இடையில் நீண்டகாலத்துக்குப்பின் இப்போது மீண்டும் நட்பில் நெருக்கம் ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு.எம்.ஜி. ஆர். தலைவராகவும், திரு.எஸ். எஸ். ஆர். உப தலைவராகவும் தமிழக அரசின் கீழ் இயங்கும் சபை ஒன்றிற்குத் தெரிவாகியுள்ளனர்.

இச் சபையில் நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரனும் அங்கம் வகிக்கிறார். (உ)

### கல்வீசினராம்

சென்னை, செப். 14

பூவிருந்தவல்லி ஆலடியில் சென்ற 3ம் தேதி அன்று நிகழ்ந்த இலங்கைத் தமிழர் அனுதாபக் கூட்டத்தில் அதி மு.க.வினர் கல்வீசியதால் சந்திரன், லத்தீப் என்னும் இருவாலிபர்கள் படுகாயமடைந்தனர் என்று தி. மு. க. பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## "வகுப்புவாதத்துக்கு காஷ்மீரில் இடமில்லை"

### முதல்வர் ஷேக் அப்துல்லா

ஸ்ரீநகர், செப். 14

வகுப்புவாத அடிப்படையில் கலவரங்கள் தூண்டிவிடப்படுவதற்கு ஜம்முகாஷ்மீர் முதலமைச்சர் ஷேக் முகமது அப்துல்லா கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைத் தணிக்கையை அரசு கொண்டுவராது என்றும் ஆனால் பத்திரிகை வாயிலாக வகுப்புவாத நச்சுக்கருத்துக்கள் பரப்பப்பட்டு வகுப்புக்கலவரம் தலைதூக்கி அடிப்படைச் சமய ஒற்றுமை சிதைந்து ஜனநாயகம் அழிந்துபோவதைப் பார்த்துக்கொண்டிருக்க அரசு தயாராக இல்லையென்றும் ஷேக் அப்துல்லா கூறியுள்ளார். (உ)

### மீளவும் இந்தி

மத்தியஅரசு மீளவும் இந்தித் திணிப்பை ஆரம்பித்துள்ளதாக முரசொலி ஏடு குற்றம் சாட்டியுள்ளது.

நிதிமந்திரிக்கு- வித்தாமந்திரி எனவும் பிரதம அமைச்சருக்கு பிரதானமந்திரி எனவும் அப்பட்டமான இந்திச் சொற்கள் தமிழில் திணிப்பதாக அதுமேலும் தெரிவிக்கிறது. (கி)

# "ஏழைகள் துயர் தீராவிடின் வன்முறை தலைதூக்கும்"

## தமிழக ஜனதா செயலாளர் எச்சரிக்கை

சென்னை, செப். 14

மிகவும் பரிதாபமான நிலையில் உள்ள ஏழைகள் வாழ்வில் ஒளியேற்றுவிட்டால் வன்முறைப் போராட்டம் ஒன்று தலைதூக்குவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று திரு. குமரி அனந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்

ஜனதாகட்சி பார்லிமென்ட் உறுப்பினரும், ஜனதாகட்சியின் தமிழ்நாடு பிரிவு செயலாளருமான திரு குமரி அனந்தன் சென்னையில் இருந்து கோயம்புத்தூர் வரையிலான தமது பாதயாத்திரையை முடித்துக்கொண்டபின் கோயம்புத்தூரில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

ஹரிஜனர்கள், தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்கள் அடைந்துள்ளதைத் தாம் நேரில்கண்டதாகவும் ஹரிஜனர்கள் கேவலமாக நடத்தப்படுவதாகவும் கிராமங்கள் பலவற்றில் தீண்டாமை இன்னமும் ஒழிந்துவிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனதா ஊழியர்கள் ஹரிஜனர் நலனுக்காகப்பாடுபட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

சரசம்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த ஹரிஜனர் சமூகத்தைச் சேர்ந்த 2 மருத்துவப் பட்டதாரிகளும் ஒரு பொறியியல் பட்டதாரியும் வேலையின்றி அவதிப்படுவதாகவும் இவர்களின் நிலைகுறித்துபிரதமருக்கும், திரு.ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும் தாம் அறிவித்து பரிகாரம் தேடப்போவதாகவும் அவர் சொன்னார். (உ)

மத்திய கிழக்குப் பிரச்னை:

## யு. எஸ். கருத்துக்கு ஆதரவும் எதிர்ப்பும்

லண்டன், செப். 14

மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான பலஸ்தீனியர்களின் பங்கு குறித்து அமெரிக்கா வெளியிட்டுள்ள கருத்தை பலஸ்தீனியத்தலைவர்கள் வரவேற்றுள்ள அதேவேளை பலஸ்தீனியத் தீவிரவாதிகள் அமெரிக்காவின் கருத்தை நிராகரித்துள்ளனர்.

அமெரிக்காவின் இக்கருத்தை ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை என்று பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் கூறியுள்ளார்.

### மதுபான பர்மிட்டுகளை திருப்பிக்கொடுத்தனர்

சென்னை, செப்.14

ஒரு அ.தி.மு.க அமைச்சர், சென்னை உயர்நீதிமன்ற நீதி

(4-ம் பக்கம் பார்க்க)



## இன்று அண்ணாவின் 69-வது பிறந்தநாள்

# அண்ணாவின் வாழ்க்கை

# தமிழக வரலாறு

'அண்ணா!'......

ஆயிரம் முறை கூறினாலும் அடங்காதஆவலுடன் அண்ணா அண்ணா என ஆறுகோடி தமிழர்கள் அன்பாக அழைக்கின்ற பெயர் இது.

''நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம்- இந்த நிலத்தின் திசைகளனைத்தையும் ஆண்டோம்- ஆற்றல் மிகுந்த தமிழ அரியணையில் இருத்தி அழகு சுவைத்தோம்- சோற்றுப் பிறவிகளானோம்- இன்று சொந்தப் பெருமையிழந்து சுருண்டோம்- நாவும் இகழுமினிக்கும் இன்ப நற்றமிழ்க் கோர் நாடுங் கொற்றமும் யாவும் உடனிங்கு செய்வோம்'' என எழுச்சிப்பரணி பாடி இகழ்ச்சி செய்தார்க்கு 'இந்தா தமிழ்நாடு' என தமிழக அரசின் அரியாசனமேறிய அரசியல் மாமேதை அண்ணா.

### தனிமனிதன்வாழ்க்கை தமிழக வரலாறு!

காஞ்சியிலே பிறந்து ஏழ்மையிலே வளர்ந்து சென்னையிலே அரசமைத்த பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை தனிமனிதனின் வாழ்க்கை அல்ல அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தமிழர் இதயங்களின் எழுச்சிக்கதை. அவன் அடிதொடரும் ஆறுகோடி மானிடரின் பாதங்கள், தடம்பதிந்து புகழ் மணக்கும் இனப் தமிழ்நாட்டின் இன்றைய வரலாறு.

இலக்கிய மேதையாய்- அரசியல் ஞானியாய், அன்பு கண்ணனாய்,நாடக நடிகனாய்- எழுத்தாளனாய்- பேச்சாளனாய் எல்லாவற்றுக்கும் மேலாக ''நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். என்னைத் திராவிடன் என அழைப்பதில் பெருமையடைகிறேன்'' என அவரே தன் வாயால் கூறிய திராவிட இனத்தின் வரலாற்றில் இணையில்லா எழுச்சிச் சிங்கமாக அண்ணா திகழ்ந்தார்- திகழ்கின்றார்.

### நீதிக்கட்சியும் அண்ணாவும்

அண்ணா தன்னுடைய அரசியல் வாழ்வை நீதிக்கட்சியின் ஆதரவாளராகவே ஆரம்பித்தார். நீதிக்கட்சி என்பது 1916ம் ஆண்டளவில் உருவான தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் மறு அவதாரம். இதன் தலைவராக சேர். பி.தியாகராயர் திகழ்ந்தார். தமிழுணர்வு மறைந்திருந்த அன்றைய நேரத்தில் தமிழுணர்ச்சிப்பிளம்பாகத் திகழ்ந்தவர் தியாகராயர் எனலாம்.

தெற்கில் தனித்துவத்தை நிலைநாட்டிய நீதிக்கட்சியிலேயே அண்ணா அரசியல் வாழ்வை ஆரம்பித்தார். காங்கிரஸார் விடுதலை முழக்கமிட்ட வேளைகளில் நீதிக்கட்சியும் விடுதலையை விரும்பியது. ஆனால் காங்கிரஸ் போராட்டம்மூலம் விடுதலையை நாட நீதிக்கட்சி ஆங்கிலேயரின் ஆதிக்கத்துடன் மோதிக்கொள்ளாமல் பெறவேண்டியவைகளைப் பெற முயன்றது. இதனால் நீதிக்கட்சி ஆங்கிலேயரின் வால்பிடிக்கட்சி என்ற தவறான பெயரைப் பலர்சூட்டினர். ஆனாலும் சிந்தனைசக்தி படைத்த அண்ணா பள்ளிப்பருவத்தில் நீதிக்கட்சியினராகவே அரசியலில் கால் வைத்தார். 1927-ல் மாநில சுயாட்சியை வற்புறுத்திவந்த நீதிக்கட்சி 1938-ல் ஈ. வே. ரா. பெரியாரின் தலைமையைப் பெற்றபின்பு பூரண சுதந்திரத்தை வலியுறுத்தத் தொடங்கியது.

திராவிட இனம் என்றால் தீண்டத்தகாத இனமென இந்தியாவில் அபிப்பிராயம் நிலவிய வேளையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறையைச் சட்டமாக்கி திராவிடரை வாழவைத்த வரலாற்றுப்பெருமை நீதிக்கட்சிக்கே உரியது.

**பற்றிமாகரன்**

1926-ல் பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்த பின்பு அவ்வியக்கத்தின் இலட்சியக்கருத்துக்கள் அண்ணாவின் இதயத்தில் அலைமோதியது. பச்சையப்பன் கல்லூரி மாணவனாக இருந்த அண்ணா நீதிக்கட்சிஆதரவாளனாக- வெறும் அரசியல் பார்வையாளனாகவே அப்போதிருந்தார்.

1935-ம் ஆண்டில் பி. ஏ. ஆனர்ஸ் பரீட்சை எழுதிவிட்டிருந்த அண்ணா திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் இளைஞர்மகாநாட்டில் தான் முதலில் பெரியாரைச் சந்தித்தார். அன்றுமுதலே அண்ணா பெரியாரின் சீடனாகினார்.

### முதல் தேர்தலும் தோல்வியும்

1935-ம் ஆண்டிலே அண்ணா நீதிக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டார். விடுதலை முழக்கம் எங்கும் எதிரொலித்த நேரம்- காந்திய அலையில் பாரததேசமே இழுபட்டுச்சென்றநேரம். முடிவில் காந்திய அலை அண்ணாவுக்கு தோல்வியைத் தேடிக்கொடுத்தது.

### இந்தித்திணிப்பும் சிறையும்

1937-ம் ஆண்டில் இந்தியைப் பாடமொழியாக்குவதென ராஜாஜி அறிவித்தார். இதனைக்கண்டு இனத்துடிப்புள்ளவர்கள் அனைவரும் வெகுண்டெழுந்தனர். ஈழத்துச் சிவானந்த அடிகள் நீங்கள் இந்தியைத் திணித்தால் நாம் எதிர்த்துநிற்போமென முழக்கமிட்டார் இந்தித் திணிப்பை எதிர்த்து காஞ்சியில் நிகழ்ந்த மகாநாட்டில் அண்ணா இந்தி எதிர்ப்பணியின் தளபதியாக மாறினார்.

இப்போராட்டத்தில் அண்ணா முதலாவது சிறைவாசத்தை அனுபவித்தார். அண்ணாவுக்கு நான்கு மாதச் சிறைவாசத்தை பரிசாகப் பெற்றுக் கொடுத்த இந்தித் திணிப்பு – தாளமுத்து, நடராசா என்னும் இரு இளைஞர்களின் இன்னுயிரையும் பலி கொண்டது. இதுவே தமிழ் மக்கள் போராட்டத்தில் நிகழ்ந்த முதல் களப்பலி எனலாம்.

இந்தித் திணிப்பின் கொடுரத்தை அனுபவித்த அண்ணா திருவாரூர் மகாநாட்டில் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்னும் வரலாற்றுப் புகழ்மிக்க பிரேரணையை வழிமொழிந்தார். இந்தியாவின் தேசியகீதத்தில் கூட தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள இனத்தை திராவிட இனமென வங்கக் கவி தாகூர் பாடி இருப்பதை அண்ணா மேற்கோள் காட்டினார்.

### திராவிடக் கழகம்

சேலம்மகாநாட்டில் அண்ணா மற்றொரு அரசியல் புரட்சியை ஏற்படுத்தினர். அதுகாலவரை நீதிக்கட்சி என்ற பெயரில் இருந்த அமைப்பை திராவிட கழகமெனமாற்றக் காரணமானார். இதன்மூலம் திராவிட இனத்துக்கான முதலாவது இயக்க சக்தியைத் தோற்றுவித்தார்.

17-9-1949ம் திகதிவரை அண்ணா திராவிடக் கழகத்தின் கட்டுப்பாடுள்ள தளபதியாகத் திகழ்ந்தார்.

### கடமையும் கண்ணியமும்

அண்ணா திராவிடக் கழகத்தில் இருக்கையில் பெரியார் இந்திய சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிக்கும்படி கூறினார் ஆனால் கடமை உணர்வுமிக்க அண்ணா 'நாட்டின் விடுதலை எமது வீட்டின் விடுதலை; மகிழ்ந்து கொண்டாடுங்கள்' என எதிரறிக்கையை விட்டார் இதனால் பெரியார் — அண்ணா நெருக்கத்தில் சற்றுப் பிளவு ஏற்பட்டது.

(நாளை இதழில் முடியும்)

---




**15—9—77 வியாழன்**

(செய்திகள்: காலை 6-00 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை6-05சைவநற்சிந்தனை— இராஜேஸ்வரி பரமேஸ்வரன், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 பஜனை — பிரசாந்தி வாசா பஜனைக்குழுவினர், 7-05 இசைக்கோவை, 7-35 வயலின் — சேதீஸ்வரி நடராஜா, 8-05 வாத்தியவிருந்து.

மாலை 6-20 வாத்தியஇசை, 6-30 மழலைச் செல்வம் — நடத்துபவர் இந்திராணி தாமோதரம்பிள்ளை, 6-40 இசைப்பயிற்சி — எ. கெ. கருணாகரன்.

இரவு 7-05 திருக்குர்ஆன் விளக்கம், 7-20 மணிமொழிகள், 7-30 கிருஅத், 7-35 இருஅத், 7-35 கஸீததல்ஹம்ஸியா, 7-45 அல்மாஉல்ஹீஸ், 8-02கமமும் புலமும்— பயிர்களின் நோய்கள் — கமத்தொழிற் தகவற்திணைக்கள தகவல் பிரிவினர் அளிக்கும் நிகழ்ச்சி, 8-20 மகளிர் அரங்கு — நடத்துபவர் அன்னலட்சுமி ராஜதுரை, 8-35 மெல்லிசைப்பாடல், 8-50 பேச்சு — ''பொருளாட்சி வங்கிமுறை'' — ச. ஈஸ்பரதாஸன், 9-30 அறிவியல் அரங்கு — இ. அம்பிகைபாகன், 10-00 மெல்லிசை வாத்தியவிருந்து, 10-30 பாட்டு. (கெ)

## 1லட்சம் மண்வெட்டிகள் தேக்கம்

கொழும்பு, புதன்

கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனத்தின் களஞ்சியத்தில் ஒருலட்சம் மண்வெட்டிகள் விற்பனை செய்யப்படாமல் தேக்கி வைக்கப்பட்டிருப்பதை உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் கண்டுபிடித்துள்ளார்.

நேற்று திடீரென இக்களஞ்சியத்திற்கு விஜயம் செய்தபோதே இம் மண்வெட்டிகளைக் கண்டுபிடித்தார்.

அநாவசியமாக தேக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான அரிவாள்கள் பற்றியும் அமைச்சர் விசாரணை நடத்தினர். (இ)

**மதுபான...**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி, உயர். அதிகாரிகள் உட்பட 243பேர் தங்களுக்கு வழங்கப்பட்ட மதுப் பெர்மிட்டுக்களை திரும்பவும் ஒப்படைத்துள்ளனர்.

தமிழக அரச நிர்வாக குழுக்களில் எமது பெர்மிட் உள்ளவர்களுக்கு இடமில்லை என தமிழக அரசு அறிவித்ததை அடுத்து இவர்கள் பெர்மிட்டுக்களை திருப்பிக் கொடுத்தனர். (கி)

## விவசாயக் கடன் வட்டியை அதிகரிக்கமாட்டாதாம்

கொழும்பு, புதன்

மக்கள் வங்கி விவசாயிகளுக்கான கடன் வட்டி விகிதத்தை அதிகரிக்காது என்று மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் உறுதியளித்துள்ளார்.

முன்னர்போல் 5 சத வீத வட்டி விகிதத்தையே மக்கள் வங்கி விவசாயிகளிடம் இருந்து அறவிடும் என்று அவர் நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஏனைய வட்டி விகிதங்களை வங்கி அதிகரித்துள்ளபோதிலும் விவசாயிகளுக்கான வட்டி அதிகரிக்கப்படமாட்டாதென்று அவர் கூறினர்.

கடந்த ஆண்டு மக்கள் வங்கி கடனுதவியாக 8 கோடி ரூபா வழங்கியுள்ளது என்றார் அவர் தற்போது நாட்டில் 203 மக்கள் வங்கிக் கிளைகள் இயங்கி வருகின்றன என்று கூறி அவர் இத்தொகை அதிகரிக்கப்படும் என்றும் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சொன்னர்.

**பென்ஷன் வழங்குதல்:**

## விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்படுவர்

கொழும்பு, புதன்

அரசாங்க ஊழியர்களின் பென்ஷன் சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும்பொருட்டு விசேஷ அதிகாரிகளை நியமிக்க பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்.

முதலில் கல்வி இலாகா, சுகாதாரஇலாகா, நீர்ப்பாசன இலாகா ஆகியவற்றைச் சேர்ந்த ஓய்வுபெறும் ஊழியர்களின் பென்ஷன் விஷயங்கள் கவனிக்கப்படும்.

ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு காலம் கடந்து பென்ஷன் வழங்கப்படுவதைத் தவிர்த்து, ஓய்வுபெற்ற அடுத்த மாதமே அவர்களுக்குப் பென்ஷன் வழங்குவது குறித்தும் அமைச்சர் ஆராய்ந்து வருகின்றார்.

## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், வியா

நாளை வெள்ளிக்கிழமை வண்ணை சாந்தையர் மடம் பிள்ளையார் கோவிலில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் நடைபெறுகிறது. அபிஷேக ஆராதனை உற்சவம் ஆகியவற்றுடன் மாலை திரு. வேலுப்பிள்ளை சிவஞானத்தின் பக்திப் பாடலும் பஜனையும் இடம்பெறும். (அ)

## "அந்தச் சகோதரரின் உதவி''

யாழ்ப்பாணம், வியாழன்

இனக் கலவரத்தின்போது காணாமல்போன காரைநகர் வாசி ஒருவர் மிகுந்த கஷ்டத்தின்பின் சொந்த இடம் வந்து சேர்ந்தார் என அறிவிக்கப்படுகிறது.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆசிரியர் திரு. கே. சிவமணியின் இளையசகோதரரான மகேந்திரன் என்ற இவ்வாலிபர் அனுராதபுரத்தில் கலவரம் மூண்டபோது துரத்தப்பட்டு கெக்கிராவையில் ஒரு சிங்களப் பிரமுகரிடம் அடைக்கலம் புகுந்தாராம். பல கஷ்டங்களின் பின்பும் தம்மைப் பாதுகாத்து அச்சகோதரர் தம்மை அநுராதபுரம் அழைத்துவந்து பாதுகாப்பாக வவுனியாவுக்குப் பஸ் ஏற்றிவிட்டாராம்,

## சங்காபிஷேகம்

ஊரெழு, வியாழன்

ஊரெழு பர்வத பத்தினி அம்பாள் ஆலய ஞானவயிரவர் கோவில் சங்காபிஷேக உற்சவம் வியாழக்கிழமை பகல் நடைபெறவிருக்கிறது. இரவு விசேஷ இசை நிகழ்ச்சிகளாக தவில் வித்துவான் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தியின் புதல்வன் உதயசங்கரின் தவில் கச்சேரி உட்பட ஈழத்துக் கலைஞர்களின் நாதஸ்வர இசை விருந்தும், ''சத்தியவான் சாவித்திரி'' வில்லிசையும் மற்றும் மெல்லிசைநிகழ்ச்சிகளும்இடம் பெறும்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 2-45. 6 45
ஜெய்சங்கர் - நிர்மலா
எடுப்பார்
கைப்பிள்ளை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
சிவாஜி - மஞ்சுளா
மன்னவன்
வந்தானடி

RIO
(Jaffna)
Daily 10-30, 4-45, 7-15 p. m. only
Touch of Love
( New Release )

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ புஷ்பலதா
ஃ அசோகன் ஃ நாகேஷ்
நல்வரவு
[புதிய பிரதி]

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
16-9-77 நாளை முதல்
பெண் தெய்வம்

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p. m.
One of the foremost Fun Films of the year.
The story of strange carrying—on at a Caravan
KENNETH WILLIAMS — ELKE SOMMER
in
"CARRY ON BEHIND"
(Color)

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர் - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30, 12-30,
பி. ப. 3 30, 6-00 மணி
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
எஸ் எஸ் ஆர் - விஜயகுமாரி
எம். ஆர். ராதா, தங்கவேலு நடித்த
உல்லாசப் பயணம் [புதிய பிரதி]

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி10-30, 2-30 மாலை6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7698
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி


# 'தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர்'

## கார்த்திகேசனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

'தோழர் கார்த்திகேசன் இறுதிவரை திரிபுவாதிகளைப் போலல்லாமல் இயக்கத்திற்காக உண்மையாக உழைத்தவர் அவர் பட்டம் பதவிகளை நாடிப்போகவில்லை. அவருடைய சிந்தனைகள் ஒரு போதும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததில்லை. இனம், மொழி, மதம் என்ற பேதமில்லாமல் எல்லோருடைய வாழ்வுக்கானதுமான நல்ல சிந்தனைகளோடு வாழ்ந்தார்.'

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் மு கார்த்திகேசரின் தகனக்கிரியைகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் பிரிவு) பொதுச் செயலாளர் தோழர் சுரவிட்ட பேசுகையில் கூறினார்.

தோழர் மு. கார்த்திகேசனின் பூதவுடல் நேற்று முன் தினம் மாலை வழுக்கையாற்றுக்கருகிலுள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

வட்டுக்கோட்டை வராட்சி மன்றத்திற்கருகிலுள்ள அவர் வசித்த இல்லத்தில் நடைபெற்ற இறுதிச்சடங்குகளின் போது பல இடதுசாரி இயக்கங்களின் உறுப்பினர்களும், அனுதாபிகளும் கலந்துகொண்டனர்

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 'மா. லெ.) வடபிரதேசச் செயலாளர் தோழர் வி ஏ கந்தசாமி பேசுகையில், 'மரணிக்கின்ற வேளையில் கூட கடமையே கருமமாயிருந்தார் அவர் தனது இறுதி நாட்களில் மிக ஈடுபாடுடன் தேசிய இனப் பிரச்னைகள் பற்றிய நூல்களைப் படித்துக்கொண்டிருந்தார். தோழர் ஸ்டாலினின் இனப்பிரச்னைகள் சம்பந்தமான நூலொன்றின் குறிப்பிட்ட சில பாகங்களைக் கோடிட்டுக்காட்டி எங்களை அவற்றைப் படிக்கும்படி கேட்டுக்கொண்டார். அண்மையில் தேசிய இனப்பிரச்னைகள் சம்பந்தமாக சீனவில் வெளியான வெளியீடொன்றை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

அவர் சென்ற மாதம் 17-ம் திகதி ரயிலில் பிரயாணம் செய்தபோது காடையர்கள் தங்கள் காடைத்தனத்தைக் காட்டியிருக்கின்றனர். அவர்களால் தாக்கப்பட்டபோதிலும் அவரது சப்பாத்துக்களைக் கவர்ந்து சென்றனர். அவர் இதைப்பற்றி எங்களிடம் குறிப்பிட்டபோது தனது இயல்பான நகைச்சுவையுடன் 'நான் போக முடியாத இடத்திற்கு எனது பாதரட்சைகள் போகின்றன' என்று கூறினார்.

'அவருடைய மரணம் இனங்களுக்கிடையிலான சௌஜன்யம் என்ற கோரிக்கையை மழுங்கடித்து பிரிவினையை உச்சநிலைப்படுத்தியிருக்கும் இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ளது துரதிர்ஷ்டமானது' என்றார். (கூ-உ,

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

தேசிய லொத்தர்சபையில் நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 630-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**
**15 K 0634**
**ரூபா 1,00,000-00**

**இரண்டாவது பரிசு**
**03 W 0905**
**ரூபா 40,000-00**

**மூன்றாவது பரிசு**
**46 V 0512**
**ரூபா 10,000**

தலா ரூபா 1,100 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | A | 0028 | 03 | A | 0357 |
| 06 | A | 0756 | 18 | A | 0486 |
| 20 | A | 0319 | 30 | A | 0619 |
| 12 | B | 0958 | 48 | B | 0997 |
| 11 | C | 0983 | 49 | C | 0082 |
| 44 | D | 0197 | 22 | E | 0533 |
| 36 | E | 0918 | 43 | E | 0740 |
| 43 | E | 0996 | 49 | E | 0557 |
| 11 | F | 0222 | 30 | F | 0571 |
| 01 | G | 0540 | 03 | G | 0809 |
| 06 | G | 0660 | 08 | G | 0225 |
| 09 | G | 0153 | 14 | G | 0853 |
| 06 | H | 0830 | 12 | H | 0312 |
| 17 | H | 0219 | 06 | J | 0590 |
| 16 | J | 0246 | 33 | J | 0486 |
| 34 | J | 0880 | 48 | J | 0595 |
| 13 | K | 0608 | 25 | K | 0550 |
| 32 | K | 0147 | 41 | K | 0509 |
| 45 | K | [illegible]384 | 47 | K | 0241 |
| 49 | K | 0848 | 29 | L | 0665 |
| 38 | L | 0201 | 43 | L | 0839 |
| 45 | L | 0546 | 16 | M | 0449 |
| 27 | M | 0975 | 36 | M | 0879 |
| 52 | M | 0696 | 03 | N | 0185 |
| 35 | N | 0580 | 22 | O | 0[illegible]61 |
| 01 | P | 0965 | 03 | P | 0962 |
| 05 | P | 0573 | 05 | P | 0663 |
| 12 | P | 0981 | 24 | P | 0873 |
| 25 | P | 0557 | 46 | P | 0913 |
| 95 | Q | 0968 | 12 | Q | 0381 |
| 7 | R | 004[illegible] | 29 | R | 0598 |
| 39 | R | 0986 | 47 | R | 0513 |
| 10 | S | 0946 | 34 | S | 0178 |
| 36 | S | 0237 | 37 | S | 0551 |
| 38 | S | 0485 | 48 | S | 0325 |
| 52 | S | 0552 | 02 | T | 0727 |
| 16 | T | 0757 | 25 | T | 0288 |
| 36 | T | 0561 | 52 | T | 0995 |
| 12 | U | 0134 | 13 | U | 0456 |
| 34 | U | 0151 | 40 | U | 0015 |
| 47 | U | 0989 | 03 | V | 0802 |
| 27 | V | 0615 | 01 | W | 0090 |
| 02 | W | 0634 | 28 | W | 0319 |
| 30 | W | 0623 | 39 | W | 0131 |
| 48 | W | 0898 | 26 | X | 0499 |
| 30 | X | 0009 | 22 | Y | 0998 |
| 32 | Y | 0920 | 36 | Y | 0420 |
| 08 | Z | 0157 | 22 | Z | 0742 |
| 23 | Z | 0943 | 30 | Z | 0862 |
| 31 | Z | 0847 | 4[illegible] | Z | 0905 |

# இன்னல்களை அறிந்தனர்

யாழ்ப்பாணம், வியா

கலவரத்தால் பாதிப்புற்ற தமிழ் அஞ்சல் தொடர்புச் சேவையாளர் சங்க ஊழியர்களை யாழ்ப்பாணக்கிளையின் வேண்டுகோளுக்கமைய தாய்ச் சங்கத்தலைவர் திரு எல்.ஜி.டி. விக்கிரமசிங்காவும், பொதுச் செயலாளர் திரு பஸில் சில்வாவும் யாழ்ப்பாணம் பரியோவான கல்லூரியில்நடைபெற்ற கூட்டத்தில் கலந்து அவர்களுக்கான இன்னல்களை அறிந்ததுடன், அவர்கள் கடமைக்கு திரும்புவதிலுள்ள கஷ்டங்களையும் விசாரித்தனர். இதற்காகவே அவர்கள் யாழ்ப்பாண விஜயத்தைமேற்கொண்டனர்.

அங்கத்தவர்களை 12 ம்திகதி வேலைக்குத் திரும்புமாறு அ. தொ. சேவையாளர் சங்க தாய்ச்சங்க பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்ததாக ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தமை தவறென யாழ்ப்பாணக் கிளை தலைவர் ச. நல்லைநாதன் அறிவித்துள்ளார். (கெ)

## நாளை நடக்கும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். முஸ்லிம் ஐக்கிய சன சமூக நிலையத்தினர் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி நாளை பிற்பகல் ஜின்னா மைதானத்தில் இடம்பெறவிருக்கிறது. இப்போட்டியில் சன்ரைஸ் கோஷ்டியும் சென். மேரிஸ் கோஷ்டியும் மோதுகின்றன. வெற்றிபெறும் கோஷ்டிக்கு எம். காசிம் பரிசுக் கிண்ணம் வழங்கப்படும். (அ)

# 3 சங்கங்களுக்குத் தலைவர்

வண்ணார்பண்ணை, புதன்

கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்கள் புனரமைப்பைத் தொடர்ந்து நெடுந்தீவுப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம், மூன்று சங்கங்களின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நெடுந்தீவு தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கம், நெடுந்தீவு மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவராக அமிர்தலிங்கம் நியமனம் பெற்றுள்ளார். (அ)

# உற்சவம்

யாழ்ப்பாணம், வியா.

சரித்திரப்பிரசித்திவாய்ந்த உரும்பராய் கருணாகரப் கோயில் மஹோற்சவம் இம் மாதம் 18-ம் திகதி ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

26-ம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருமுறை இசை விருந்துகள் சமயப்பிரசங்கங்கள் என்பன இவ்வுற்சவ காலங்களில் இடம்பெறவுள்ளன.

# நல்லாசிரியை திருமதி சின்னம்மா

எவருடைய வெறுப்புக்கோ மனக்கசப்புக்கோ இலக்காகாமல் அனைவருடைய நன்மதிப்பையும் தூய அன்பையும் பெற்று வாழ்க்கை நடாத்துதலென்பது இவ்வுலகில் ஒருசிலராற்றான் முடியும். அந்த ஒருசிலருள் மாதுசிரோன்மணி திருமதி சின்னம்மா தெட்சணாமூர்த்தியும் ஒருவர். அவரை அறிந்த எவரும் உற்சாகத்துடன் ஏற்றுக்கொள்வர் 1934-ம் ஆண்டு தொடங்கி பரமேஸ்வராக்கல்லூரியில் அதி உன்னதமான பணியாற்றி ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளின் நல்வாழ்வுக்கு வித்திட்டு வாழ்வாங்கு வாழ்வது எங்ஙனம் என்பதை அவர்களுக்கு வாழ்ந்து வழி காட்டி பின்னர் அக்கல்லூரியிலிருந்தே 1972-ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1946-ம் ஆண்டு தொடக்கம் 1970-ம் ஆண்டு வரை திருமதி தெட்சணாமூர்த்தியுடன் பரமேஸ்வராக் கல்லூரியில் பணியாற்றியுள்ளேன் அக்காலத்தில் அன்னாரது உயர்ந்த பண்புகளையும் இலட்சியங்களையும், கல்விப் பணியில் உள்ள அயராத ஆர்வத்தையும், அன்பு நிறைந்த உள்ளத்தையும், சினமென்பதை சிறிதும் அணுகாத மனப்பாங்கையும் நேரடியாக நான் அறிய முடிந்தது. சிறு குழந்தைகள் அனைவரையும் தம் குழந்தைகள் போல் பாவித்து அவர்கள் தாமாகவே விரும்பிப் பாடங்களில் அக்கறை காட்டும் வண்ணம் அவர் சேவையாற்றினார். நவீன உலகில் உளவியலாளர் சிறந்த ஆசிரியருக்குக் கூறும் வரைவிலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார் இம்மாதரசி.

இவர் ஒரு சிறந்த இல்லத்தரசி மாத்திரமல்ல, போற்றிப் பூசிக்கவேண்டிய தாயுமானார்: அவனன்றி ஓரணுவும் அசையாதென்பதை ஆழமாக உணர்ந்தமையினால் அன்னார் எண்ணும் எண்ணங்களனைத்தும், பண்ணும் பணிகள் அனைத்தும், இயம்பும் மொழிகள் அனைத்தும் இறைவன்மயமாகவே இருந்தது. அதனாற்றான் அந் நல்ல குருநாதன் இவ்வடியாளை பூவோடும், பொட்டோடும் கடந்த 28-ம் திகதி தன் தாள்களில் சேர்த்துக்கொண்டான்.

சி. சுப்பிரமணியஐயர்,
[பலாலி ஆசிரியகலாசாலை, ஓய்வுபெற்ற ஆங்கில விரிவுரையாளர்]

# 375 அகதி குடும்பங்களுக்கு வடக்கில் அரச காணிகள்

## அரசாங்க அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், வியா. அண்மையில் நாட்டில்இடம் பெற்ற இனவாத சம்பவங்களினால் நிலைபெயர்க்கப்பட்டுள்ள 375 தமிழ்க் குடும்பங்களுக்கு யாழ். மாவட்டத்தில் அரசாங்கக் காணிகள் வழங்கப்படவுள்ளன.

அரியாலை, நாவற்குளி, முழங்காவில், கொழும்புத்துறை, தென்னியன்குளம், ஜனயன்குளம், விசுவமடுப்பகுதியில் இவர்களுக்கான காணி வழங்கும் நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக தம்மைச் சந்தித்த தமிழர் புனர்வாழ்வுச்சபை தூதுகோஷ்டியிடம், அரசாங்க அதிபர் திரு. டபிள்யு.ஏ.எல். விஜயபாலா உறுதியளித்துள்ளார்.

இக்காணிகளுக்கான வரை படங்கள் தயாரிக்கப்பட்டதும் உடனடியாக, தமது வீடு, வாசல்களை இழந்து அகதிகளாகத் திரும்பியுள்ள 40 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு காணி வழங்கப்படுமெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நிலைபெயர்க்கப்பட்ட அகதிகளுக்கான தகவல்களை இது வரை புனர்வாழ்வுச்சபைக்குத் தெரிவிக்காதவர்கள் இம்மாதம் 22ந் திகதிக்கு முன்னர் தமது நிலைகுறித்து அறிவிக்குமாறு தமிழர் புனர்வாழ்வுச்சபைச் செயலாளர் திரு. நடராசா கோரியுள்ளார்.

வடக்கு வந்துள்ள 5000க்கும் அதிகமான நிரந்தர இருப்பிட வசதியற்ற தமிழ் அகதிகளைக் குடியமர்த்த, குடியேற்றத் திட்டங்களை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு காணி அமைச்சர் திரு.ஈ.எல். சேனநாயக்காவை இச்சபையின் குழு ஒன்று சந்திக்கவிருக்கின்றது என்றும் திரு. நடராஜா தெரிவித்தார்.

(கெ-இ)

## டாக்டர்கள்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலம்பற்றி ஆராய்வர்.

நேற்று முன்தினம் கூடிய டாக்டர்கள் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் தாம் வேலைக்குத் திரும்புவதில்லை என்று தீர்மானித்தனர். இக்கூட்டத்தில் இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கதலைமையகபிரதிநிதிடாக்டர் எஸ். சிவகுமாரும் கலந்து கொண்டார். (இ)

## பாதிக்கப்பட்ட—

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வளாகங்களிலிருந்து பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர் விரிவுரையாளர்களின் அமைப்பின் தெரிவுக்குழுவுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்ட சகல வளாக விரிவுரையாளர், மாணவர் அமைப்புக்குழுவின் கீழ்க்காணுவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ச சண்முகநாதன் (பேராதனை), உபதலைவர்: திரு. ச. சிவயோகநாதன் கட்டுப்பெத்த), இணைக்காரியதரிசிகள்: திரு. தட்சணாமூர்த்தி (பேராதனை) திரு. அந்தோனிமுத்து (வித்தியோதயா) பொருளாளர்: கலாநிதி நரேந்திரன் (பேராதனை).

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா பொன்னையா

சாவகச்சேரி வடக்கு திருமதி சின்னம்மா பொன்னையா (14-9-77) புதன்கிழமை காலமானார். இவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தின் சாவகச்சேரித்தொகுதி அமைப்பாளர் தியாகராசா, திருமதி செளபாக்கியம் பூபாலபிள்ளை ஆகியோரின் தந்தையும், பூபாலபிள்ளை (கொழும்பு காணிப்பதிவு திணைக்களம்) யின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (15-9-77) வியாழக்கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

7109

## தமிழ் அகதிகளுக்கு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிச் செல்லவிரும்பாதவர்களுமே வடபகுதியில் முகாம்களில் இருக்கிறார்களென்றும் அரசாங்க அதிபருக்கு இக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது. வடபகுதியிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள குடியேற்றத் திட்டங்களிலும் அகதிகளுக்கு நிரந்தரமான இருப்பிட வசதியும் மற்றும் நிவாரண வசதிகளும் செய்யப்படவேண்டியுள்ளதென்றும் இங்கு வற்புறுத்தப்பட்டது.

### தற்காலிக ஏற்பாடு

அரசாங்க அதிபர் திரு. விஜயபால பேசுகையில், யாழ் மாவட்டத்தில் விவசாயத்திற்கெனவும், குடியேற்றத் திட்டங்களுக்கெனவும் கொடுக்கப்பட்ட காணிகளில் தற்காலிகமாகக் காணி உரித்தாளர்கள் இல்லாத வீடுகளில் இவர்களைக் குடியிருத்த வசதிசெய்யலாமென்றும், திரும்பிச் செல்பவர்களுக்குத் தற்காலிக இட வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியது அவசியமென்றும் இது பற்றி இக்கழகத்தின் ஆலோசனைகளை மனதில் வைத்து ஏற்பாடுகளைச் செய்யத் தான் சித்தமாயிருப்பதாகவும் தெரிவித்தார். கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் குடியிருப்பில்லாத வீடுகள், காணிகள் இருந்தால் அவற்றில் இவர்களைத் தற்காலிகமாகக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

### அகதிகள் விரும்பவில்லை

இக்கழகத்தின் உறுப்பினர்களில், ஒருவரான திரு. வ. பொன்னம்பலம், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கூறியபோது, அகதிகளான சில குடும்பங்களைத் தற்காலிகமாகக் குடியமர்த்த வசதி செய்யப்பட்டதாகவும் ஐந்து பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வசதிசெய்துள்ளதாகவும், அங்கவீனர்களானவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் சமூக சேவைப் பகுதியின் உதவியுடன் கைதடி அநாதை இல்லத்தில் சேர்க்க ஏற்பாடு செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அகதிகளின் விபரங்கள் சேகரிப்பதிலும் அவர்களுக்கு உதவிகள் செய்வதிலும் கத்தோலிக்க குருமார், சகோதரிகள் அளப்பரிய சேவை புரிந்துள்ளனர் என்றும் தெரிவித்த திரு. பொன்னம்பலம், வேறு நபர்களது காணிகளில் குடியிருப்பதையோ, தனியார் காணிகளில் தற்காலிகமாக வசிப்பதையோ அகதிகள் விரும்பவில்லை என்றும், சொந்தமாக நிலம் பெற்றுத் தாம் சுதந்திரமாக இந்த மண்ணில் வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றனர் என்றும், தாம் திரும்பிச் செல்வதை எந்த அகதிகளும் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் பணியில் ஒரு சிலர்மட்டும் இயங்குவதால் பூரண பலனை விரைவில் காணமுடியாதென்றும் சகலரும் இயங்க வேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

### 200 ஏக்கர் நிலம்

கனகபுரத்தில் 100 பேரைக் குடியமர்த்த சிலர் முன்வந்துள்ளதாகவும், பொறியியலாளர் திரு. தேவராசா 30 ஏக்கர் நிலம் முல்லைத்தீவு மாங்குளம்பகுதியில் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

தொழில் துறையிலும், விவசாயத்துறையிலும் இவர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு வழிகாட்டவேண்டியிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. திரு. நீதிராசா 200 ஏக்கர் நிலத்தைக் கொடுக்க சம்மதம் தெரிவித்ததாகவும் நெடுங்கேணியில் இந்த நிலம் இருப்பதாகவும் முன்னாள் செனட்டர் திரு. ச. நடராசா தெரிவித்தார். அப்பகுதியில் பாதுகாப்பும், தொழில் வாய்ப்பும் ஏற்படுத்தி குடியமர்த்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

500 அகதிகளை முதலில் குடியிருத்துவதற்கு அரசாங்கத்தின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் இதுசம்பந்தமாக உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடப்பதாகவும் சபையில் தெரிவிக்கப்பட்டது.

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, திரு. யோகேந்திரா துரைசுவாமி, திரு ரி. இராசலிங்கம், டாக்டர் பாலசிங்கம், டாக்டர் சுப்பிரமணியம், சட்டத்தரணி சகீட், பருத்தித்துறை எம். பீ. திரு. க. துரைரத்தினம், உட்பட யாழ். அதிவண. ஆயரின் பிரதிநிதிகளும் மற்றும் குழு உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (க)

## வடபகுதியில் அகதிகள் குவிகின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பல அகதிகள் தொடர்ந்தும் வடபகுதிக்கு வந்துகொண்டிருக்கின்றனர்.

தம்பலகாமம், புசல்லாவ, மாத்தளை, கெக்கிராவ, கண்டி ஆகிய இடங்களிலிருந்து நேற்றும் நேற்று முன்தினமும் பல அகதிகள் கிளிநொச்சி வந்து சேர்ந்துள்ளனர்

நேற்று முன்தினம் 90 அகதிகளும் நேற்று 60 அகதிகளும் ரயில் மூலம் கிளிநொச்சிக்கு வந்தனர். இவர்கள் கிளிநொச்சியில் உள்ள அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

### தொற்றுநோய்

இதேவேளையில் கிளிநொச்சிப்பகுதியிலுள்ள அகதிகள் முகாம்களில் உள்ள அகதிகள் சிலர் தற்போது சின்னமுத்து, கண்நோய் ஆகிய தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இங்கு வைத்திய வசதி மிகக் குறைவாக உள்ளதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

...

## விசேட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களை அழைத்து நடத்திய மாநாடு ஒன்றில் தொண்டர் படையினரை ஊக்குவித்து இரவு பகலாக கிராமங்கள்தோறும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க உதவி அரசாங்கஅதிபர்கள் இவ்வேண்டுகோளை செயற்படுத்திவருகின்றனர்.

### பொதுமக்கள் கடமை.

குற்றச்செயல்களைக் குறைப்பதில் பொதுமக்களின் பங்கு அளப்பரியது என்று மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. (உ)

## வவுனியாவுக்கு புதிய அரசாங்க அதிபர்

வவுனியா, புதன் வவுனியா அரசாங்க அதிபராக இருந்த திரு. எஸ் சிவஞானம் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. ஜீ முதன்நாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. முதன்நாயக்கா நேற்று முன்தினம் வவுனியா கச்சேரியில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். (இ)

## மணவாளக் கோலவிழா

(மட்டுவில்)

மட்டுவில் வேப்படி அம்பலந்துறை ஸ்ரீ வயலூர் முருகனின் மணவாளக் கோல விழா இன்று இரவு நடைபெறும்.

முருகப்பெருமானின் திருப்பொன்னூஞ்சலைத்தொடர்ந்து பிரதம குரு பிரம்மஸ்ரீ க. பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் பண்ணிசை மாமணி, சங்கீதபூஷணம் திரு. சி. விஞசித்தம்பி, சங்கீத பூஷணம் திரு. குமாரசாமி, பாடசாலை அதிபர் திரு. ச. சுப்பிரமணியம், திரு. அருள் வேலழகன் ஆகியோரின் மதஉபன்நியாசங்களும் இடம் பெறும். (இ)

# 5 வயதுப் பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் அனுமதி

## ஆக.3-ம் திகதிக்கு முன்விண்ணப்பிக்கவும்

கொழும்பு, புதன் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் வகுப்புகளில் இனிமேல் ஐந்து வயதுப் பிள்ளைகளும் அனுமதிக்கப்படுவர்.

பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான வயதெல்லையை அரசாங்கம் ஆறுவயதிலிருந்து இப்போது ஐந்தாகக்குறைத்துள்ளது.

1973ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியும் அதற்கு முன்னரும் பிறந்த சகல பிள்ளைகளும் 1978-ம் ஆண்டு ஜனவரிமாதம் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் அனுமதிக்கப்படுவர்.

அடுத்த வருடம் முதலாம் வகுப்பில் தமது பிள்ளைகளைச் சேர்க்கவிரும்பும் பெற்றோர்கள் அடுத்தமாதம் 3-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்களுக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும் என்றும் நேரில்கொடுக்க விரும்புபவர்கள் விண்ணப்பங்களைக் கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டை கல்லூரி அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது:

பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் விடயத்தில் பாடசாலைக்கும் பிள்ளையின் வீட்டுக்கும் இடைப்பட்ட தூரம் மட்டுமே கணிக்கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (இ)

இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் நடாத்தும்
இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான
**விசேட பொதுக்கூட்டம்**

18-9-77 ஞாயிறு காலை 9-45 மணிக்கு யாழ், இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் திரு, டி.எஸ்.கே. வணசிங்க தலைமையில் நடைபெறும் எமது சங்க யாழ். மாவட்டச் செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கம் 11-9-77 'ஈழநாட்டின்' மூலம் உங்களுக்கு அளித்த உறுதிமொழியின்படி உங்கள் கோரிக்கைகள் - எடுத்த நடவடிக்கைகள்- நடைபெற்ற பேட்டி-தீர்வுகள் - இம்மாதச் சம்பளத்தை இங்கு வழங்குதல் - கடமை லீவு - சுவீகரிக்கப்பட்டதோட்டப்பாடசாலை ஆசிரியர் பற்றிய முடிவுகள் என்பன பற்றிப் பொதுச்செயலாளர் திரு. ந பாலசுப்பிரமணியம் கூட்டத்தில் விபரமாகக் கூறுவார். உங்கள் பாதுகாப்பு நலன்கருதிக் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

அ. பொன்னம்பலம்
திருவாகச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம்.

கிழுவானை வீதி,
கோப்பாய்,
14-9-77.

7103

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News papes in Sri Lanka;